# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 156 | புதன்கிழமை Wednesday | 02.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார் முதலமைச்சர் விஜய்



சேலம்: டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார். அணையில் இருந்து வெளியேறிய காவிரி நீரில் பூக்கள், நெல் ஆகியவற்றைதூவிமரியாதை செலுத்தினார்.

டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து (செப்.1) நீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்காக காலை சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் முதலமைச்சர் விஜய் சேலம் வந்தடைந்தார். பட்டு வேட்டி சட்டை அணிந்து வந்த முதலமைச்சருக்கு அரசு அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர்.

அதனைத்தொடர்ந்து, சாலை மார்க்கமாக மேட்டூர் அணைக்கு வந்த முதலமைச்சர் விஜய். வழியெங்கும் திரளாக குவிந்திருந்த பொதுமக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். வாகனத்தின் மேல் இருந்து பொதுமக்களின் வரவேற்பை ஏற்றப்படி முதலமைச்சர் விஜய் மேட்டூருக்கு வருகை தந்தார்.

மேட்டூர்அணைதிறப்பு

அதனையடுத்து,மேட்டூர் அணை நுழைவாயிலில் அவருக்கு காவல்துறையினர் மரியாதை செலுத்தினர். அதனை ஏற்றுக்கொண்டு அணைக்கு சென்ற அவர், காவிரியை வணங்கி, மேல தாளங்கள் முழங்க அணையின் மதகுகளை திறந்து வைத்தார். தொடர்ந்து, அணையில் இருந்து வெளியேறிய காவிரி நீரில் பூக்கள், நெல் ஆகியவற்றைதூவிமரியாதை செலுத்தினார்.

பின்னர்,அங்கு கூடியிருந்தவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்ட முதலமைச்சர்விஜய்க்கு, காவிரியில் மேட்டூர் அணையின் கட்டுமானம் தொடர்பாகவைக்கப்பட்டிருந்த புகைப்படங்களை அரசு அதிகாரிகளுடன் பார்வையிட்டார். அவருடன் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்த், போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் ஆகியவர்கள் உடனிருந்தார்.

மேட்டூர் அணை நீர்மட்ட விவரம்

தற்போது அணையில் இருந்து 3,000 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது. கடைமடை வரை தண்ணீர் செல்லும் வகையில் 12 ஆயிரம் கன அடி வரை தண்ணீர் திறக்கப்பட உள்ளதாக நீர்வளத் துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். முதலமைச்சரின் வருகையையொட்டி, சேலம் மாவட்டம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.இந்தாண்டு அணையில்நீர்குறைவாகஇருந்ததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால்காவிரிடெல்டா விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

கர்நாடகாமாநிலத்தில் பெய்த கனமழையின் காரணமாக கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் நீர் வரத்து அதிகரித்தது.அதனையடுத்து, காவிரி ஆற்றில் தண்ணீர்திறக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரில் அளவு அதிகரித்து.

மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து கடந்த 4ஆம்தேதி முதல்படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில்,நேற்றுமாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 91.15 அடியாக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், டெல்டா பாசனத்திற்கு தேவையான தண்ணீரை முதலமைச்சர் விஜய் மேட்டூர் அணையில் இருந்து திறந்து வைத்துள்ளார்.

முதல்–அமைச்சர் விஜய்யின் சேலம் வருகையையொட்டி சேலம் மாவட்டம் முழுவதும் போலீஸ்பாதுகாப்புதீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அவரை வரவேற்கும் விதமாக விமான நிலையத்தில் இருந்து மேட்டூர் வரை சாலையில் இருபுறமும் கட்சி கொடிகள் கட்டப்பட்டிருந்தன. திறந்த வேனில் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களை நோக்கி கையசைத்தவாறு முதல்–அமைச்சர் விஜய் ரோடு ஷோ நடத்தினார். சாலையின் இருபக்கங்களிலும் கூடியிருந்த ஏராளமான பொதுமக்களும், தவெக தொண்டர்களும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# அனிதா நினைவேந்தல் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு ஏன்? எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி



அனிதாவின் 9-ம் ஆண்டு நினைவேந்தல் கூட்டத்திற்கு அரசு அனுமதி மறுத்த விவகாரம் தொடர்பாக சட்டமன்றத்தில்எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கும், அமைச்சர்ஆதவ் அர்ஜுனாவுக்கும் இடையே காரசார விவாதம் நடைபெற்றது.

அப்போது உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு மற்றும் அனிதாவின் குடும்பம் சார்பில் அமைதியான நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஏன் அனுமதி வழங்கவில்லை. பெசன்ட் நகர் வேளாங்கண்ணி ஆலய கொடியேற்றம் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்ட சூழலில், ஜனநாயக ரீதியில் அமைதியாக நடைபெறஇருந்தஅனிதாவின் நினைவேந்தல்கூட்டத்துக்கு அரசு அனுமதி கொடுக்காதது ஏன்?.

பெசன்ட் நகர் மாதா கோவிில் கொடியேற்றத்தைக் காரணம் காட்டி அனிதாவின் 9ம் ஆண்டு நினைவேந்தல் கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. ஆனால், அங்கு அந்த அளவில் கூட்டம் இல்லை; உடனடியாக அனுமதிவழங்கவேண்டும். அல்லது மாற்று இடத்தை கொடுக்க வேண்டும். அனிதா மரணத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் தனக்கு இல்லை" என்று தெரிவித்தார்.

அனிதா நினைவு நாள்

அதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகளை கருத்தில் கொண்டே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித அரசியலும் இல்லை. எனினும், நினைவேந்தல் கூட்டத்தை நடத்துவதற்கு ஏதுவான மாற்று இடத்தை தேர்வு செய்ய அரசு தரப்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "இன்றைய நாள் தங்கை அனிதா நினைவு நாள். தன்னுடைய கோரிக்கைக்காக சுப்ரீம்கோர்ட்டு வரை சென்று கோரிக்கை நிறைவேறாததால் உயிரிழந்தார். 3 மாநில முதல்வர்கள் நீட்டுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியும் மத்திய அரசு நீக்கவில்லை.

வரக்கூடிய காலங்களில் தேர்தல் சூழ்நிலை மாறும் நிலையில், உறுதியாக மாறும். 2029ல் தேர்தல் சூழ்நிலை மாறும் போது, சட்டமன்றத்தில் ஒலித்த குரல், பாராளுமன்றத்தில் நீட் தூக்கி எறியப்படும் நாளாகமாறும்.அனிதாவின் தியாகம், கண்ணீர், உழைப்பு,உணர்வுநிறைவேறும்" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

ஆதவ் அர்ஜுனாவுக்கு அறிவுரை

முன்னதாக அனிதாவின் நினைவு நாள் நினைவேந்தலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்துஎதிர்கட்சிதலைவர் உதயநிதி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தன் பேச்சின் நிறைவில், "அனிதாவின் நினைவு நாளான இன்றாவது, அரசியல் செய்ய வேண்டாம்" என கூற, திமுகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

உடனே குறிக்கிட்ட சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், "அரசின் கவனத்திற்கு எதிர்கட்சி தலைவர் கொண்டு வந்துள்ளார், அத்தோடு அதை முடித்துவிடவும்" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு அறிவுரை வழங்கினார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்வு



செப்டம்பர் மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி சென்னையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு14.20கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்துவருகின்றன.

விலை உயர்வு

இந்த நிலையில், இன்று மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.10.50 உயர்ந்து, ரூ.2,916.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றி ரூ.957.50-க்கு விற்பனையாகிறது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், எழுமாத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (01.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், எலையம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, குழந்தைகள் மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (01.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.




ராஜீவ் அவர்கள் தலைமை தாங்கினார்.தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர்,பச்சைத் தேவேந்திரர்,வழக்கறிஞர் T.C.பாலசுந்தரம்அவர்கள்முன்னிலையில்திருமணநிகழ்ச்சிநடந்தது ,விழாவில்தேவேந்திரபேனாக்கள்இயக்கதலைவர் பாலசுந்தரத்தை மேளதாளத்துடன் ,பட்டாசு வெடித்தும் இளைஞரணி யினர் வரவேற்றனர்,ஆகாஷ் தலைவருக்கு பொண்ணாடை போர்த்தி மலர்மாலை அனிவித்து மரியாதை செய்தார் .மேலும் தலைவர் பாலசுந்தரம் மனமக்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில் பல சமுதாய முன்னோடிகள் ,அரசியல் பிரமுகர்கள்,அறிஞர் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# வாடியூர் தூய திருமுழுக்கு யோவான் ஆலய 113வது ஆண்டு திருவிழா

## திருத்தேரில் பவனி வந்த தூய மரியன்னை திரளான இறைமக்கள் பங்கேற்பு ;





பாளையங்கோட்டை மறை மாவட்டத்திற்கு உட்பட்ட வாடியூரில் பழமையான புகழ்பெற்ற தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 113-வது ஆண்டு பெருவிழா கடந்த 21-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

கொடியேற்ற நிகழ்ச்சியில் தர்மகர்த்தாமைனர்ராஜ்,கட்டளைதாரர் பிரான்சிஸ் பூண்டி மற்றும் இறைமக்கள் முன்னிலையில் பங்குத்தந்தையர்கள் லியோ, அருள் ஜோசப், அமிர்தராஜசுந்தர் ஆகியோர் கலந்து கொண்டு கொடியேற்றி வைத்தனர்.

முன்னதாக கொடி ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து மறையுரை மற்றும் சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

பத்து நாட்கள் நடைபெற்ற விழாவையொட்டி தினமும் மாலையில் நற்செய்தி பெருவிழா, அன்பியங்களின் கலைநிகழ்ச்சிகள், இளம்பெண்கள் மற்றும் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கடந்த 28-ம்தேதி நற்கருணை பவனியும், 29-ம் தேதி புனித ஜோசப் திருவுருவ தேர் பவனியும், கும்பிடு சேவை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

30-ம் தேதி நடைபெற்ற திருவிருந்து மற்றும் திருமுழுக்கு விழாவை தொடர்ந்து,மாலை புனித மரியன்னை, புதிய அருளப்பர் மற்றும் புனித மிக்கேல்அதிதூதர் ஆகியோர் திருத்தேரில் எழுந்தருளி வலம் வந்து இறை மக்களுக்கு இறை ஆசீ வழங்கினர்.

குழந்தைகளை அன்னையின் பாதத்தில் வைத்து பெற்றோர் ஆசீ பெற்றனர்.

இறைமக்கள் காணிக்கைகளை வழங்கி வழிபட்டனர். தொடர்ந்து சிறப்பு திருப்பலி மற்றும் மறையுரை நடைபெற்றது.

விழாவில் வாடியூர், மரியதாய்புரம், ஆனைகுளம், அச்சங்குன்றம், குறிச்சாம்பட்டி உள்ளிட்ட கிளை பங்குகளைச் சேர்ந்த இறைமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை வாடியூர் பங்குத்தந்தை லியோ தலைமையில், தர்மகர்த்தா மைனர் ராஜ், கட்டளைதாரர் பிரான்சிஸ் பூண்டி,அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், ஊர் நிர்வாகிகள் மற்றும் இறைமக்கள் இணைந்து செய்திருந்தனர்.

# சங்கரன்கோவில் டிப்ளமோ இன்ஜினியர் சிங்கப்பூரில் கொலை

## செல்போன் கொடுத்தால் தான் உடலை வாங்குவோம் என தாயார் பேட்டி





தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்அருகே உள்ள மேலநீலித நல்லூர் கீழத்தெருவை சேர்ந்தவர் ராசு. இவரது மகன் மகேஷ் குமார் (30). டிப்ளமோ இன்ஜினியர். இவர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து மகேஷ் குமார் கொலை தொடர்பாக புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இருவரை சிங்கப்பூர் போலீசார் கைது செய்துள்ளனர்.

தற்போது இவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நிலையில்சிங்கப்பூரிலிருந்து சொந்த ஊருக்கு கொண்டு வர அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் அதிகாரிகளுக்கு கோரிக்கை மனு விடுத்து வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டு வர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனுவில் தெரிவித்துள்ளனர். இது குறித்து மகேஷ் குமாரின் தாயார் மாலதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இரண்டு வருடங்களாக சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்த எனது மகன் கடந்த ஆகஸ்ட் 4 ஆம் தேதி சிங்கப்பூரில் உள்ள தனியார் கம்பெனிக்கு வேலைக்கு சென்றான்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணிக்கு தனது மகன் இறந்ததாக உறவினருக்கு சிங்கப்பூரிலிருந்து தகவல் கொடுத்துள்ளனர். அவர் எதற்காக கொலை செய்யப்பட்டார் என்ற தகவலை தனியார் நிறுவனம் சரியாக பதில் சொல்லவில்லை.திருச்சி விமான நிலையத்தில் செப்டம்பர் 2-ம் தேதி நாளை புதன்கிழமை உடலை தருவதாக கூறியுள்ளனர். எனது மகனின் உடலுடன்,மகனின் செல்போன் வழங்கினால்தான் உடலைபெற்றுக் கொள்வோம்.எனது மகனின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இவ்வாறு தாயார் மாலதி கண்ணீர் மல்க கூறினார்

கொலை செய்யப்பட்ட மகேஷ் குமாருக்கு செலின் என்ற மனைவியும் 7 வயதில் மதிமாறன் ஐந்து வயதில் சதீஷ்மாறன் என்ற இரு மகன்கள் உள்ளனர்.

இரு மகன்களும் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் படித்து வருகின்றனர். இதனால் மகேஷ் குமார் ஊரில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க.வின் மூத்த முன்னோடி சங்கரதாசை சந்தித்து பேசிய சிவபத்மநாதன்



சங்கரன்கோவில் கழக முன்னோடி பாலமுருகன் அவர்கள் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்வதற்காகசங்கரன் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தேன்

வீரசிகாமணி அருகே செல்கிற பொழுது சங்கரன்கோவில் கழக மூத்த முன்னோடி சங்கரதாஸ் அவர்கள் எனக்கு போன் செய்தார்கள் ஐயா நான் ரயில்வே ஸ்டேஷனில் இருக்கிறேன் உங்களை பார்க்க வர வேண்டும் என்று சொன்னார்

நான் உங்கள் ஊருக்குத்தான் வருகிறேன் கணபதி மஹாலில் நடைபெறுகிற திருமணத்திற்கு வருகிறேன் என்று சொன்னேன்

ஐயா ungalaiஉங்களை எப்படியும் பார்க்க வேண்டும் என்று சொன்னார் ஐயா நான் உங்களை உங்கள் இல்லம் தேடி வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன்

இல்லை நான் மண்டபத்திற்குவந்துவிடுகிறேன் என்றார் அதேபோல் நான் மண்டபத்திற்கு கழக நிர்வாகிகள் மாவட்ட பொருளாளர் சரவணன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மாரிசாமி பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் தேவா முன்னாள் நகர் இளைஞர் அணி அமைப்பாளர் தம்பி குமார் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் வார்டு கழகச் செயலாளர் பெர்னாண்டஸ்ஆகியோருடன்சென்ற போது அங்கு ஐயா சங்கரதாஸ் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்

நான் திருமணத்தை முடித்துவிட்டு மணமக்களை பார்த்துவிட்டு கீழே வந்தவுடன் அவருக்கு கழக வேட்டி அணிவித்து வாழ்த்தினேன்

அப்போது அவர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தில் பேசிய பேச்சு முரசொலியில் இரண்டு பக்கம் வந்திருக்கிறது அதைபடித்தீர்களா?என்று கேட்டார் நான் நேற்றே பார்த்து விட்டேன் படித்து விட்டேன் என்று சொன்னேன்

ஐயாசங்கரதாஸ்அவர்களுக்கு 92 வயது கழக தலைவர் அவர்களோடு நெருக்கமாக பழகியவர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் குடும்பத்தோடும் நெருக்கமானவர் அவருக்கு சொந்த ஊர் சங்கரன்கோவில் ஆனால் அவர் வால்பாறை சென்று தேயிலை தோட்ட தொழிலாளியாக அவரும் அவருடையதுணைவியார் லட்சுமி அவர்களும் பணி புரிந்துள்ளா ர்கள்

தேயிலை தோட்ட தொழிலாளியாக இருக்கும் பொழுது கிளைக் கழகச் செயலாளராக வார்டு செயலாளராக மாவட்ட பிரதிநிதியாக வால்பாறை ஒன்றிய அவைத் தலைவராக இப்படி பல்வேறு பொறுப்புகளை வகித்து தேயிலை தோட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலும் பொறுப்பு வகித்தவர்

அவருக்கு 12 குழந்தைகள் ஏழு பெண் குழந்தை ஐந்து ஆண் குழந்தைகள் இரண்டு பேர் நீதிபதி ஒருவர் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நீதிபதியாக பணிபுரிந்து வருகிறார் ஒருவர் ஓய்வு பெற்று விட்டார்

அதேபோல் அவருடைய பெண் குழந்தைகள் அனைவரும் ஆசிரியராகவும்,அரசு மருத்துவமனையில் செவிலியர்ராக பணிபுரிந்து வருகிறார்கள்

இன்றைக்கும் கழக வேட்டி முரசொலி பத்திரிக்கையோடு இருப்பவர் ஐயா சங்கரதாஸ் அவர்கள் நான் மாவட்ட கழக செயலாளர் இருந்த போது 2022 ஆம் ஆண்டு அவருடைய இல்லத்தில் சென்று நானும் சட்டமன்ற உறுப்பினர் தம்பி ராஜா அவர்களும் மரக்கன்று நட்டோம்

நான்நட்ட தென்னங்கன்று தற்போது அந்த மரக்கன்று வளர்ந்து தேங்காய் காய்க்கும் பருவத்தை அடைந்து உள்ளதாக சொன்னார்

ஒவ்வொரு மாநாட்டிற்கும் முப்பெரும்விழா நிகழ்ச்சிக்கும் குடும்பத்தோடு சென்று இன்று வரை வருகிறார் அந்த அளவிற்கு கழகப் பற்று கொண்டவர்கள்

தற்போது சங்கரன்கோவில் அம்பேத்கர் நகரில் வசித்து வருகிறார்

இன்றைக்கும் கடுகளவு கூட கழகத்தின் மீது கொண்டுள்ள பற்று குறையாமல் வாழ்ந்து வரும் குடும்பமாக அந்த குடும்பம் திகழ்ந்து வருகிறது

தற்போது 92 வயது நிரம்பியுள்ளஅய்யா சங்கரதாஸ் -லட்சுமி தம்பதியருக்கு வருகிற 13-ஆம் தேதி திருமணநாள் கழகத் தோழர்கள் அனைவரும் வாழ்த்துவோம்

# ராகுல் காந்தி மீது வழக்கு:

## பாஜக அரசை கண்டித்து தூத்துக்குடி அண்ணா பேருந்து நிலையம் முன்பு காங்கிரஸ் மறியல்



நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது பொய்யான வழக்கு பதிவு செய்த மத்திய பாஜக அரசையும், அதன் உத்தரவின் பேரில் செயல்படும் உத்தரகாண்ட் அரசையும் கண்டித்து, தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் பழைய பேருந்து நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் நடைபெற்றது.

மாவட்ட காங்கிரஸ் தலைவர் எஸ்.எம். சகாயராஜ் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.பி. சுடலையாண்டி, மண்டலத் தலைவர்கள் ஐசன் சில்வா, நிர்மல் கிறிஸ்டோபர், ஊடகப்பிரிவு தென் மண்டல தலைவர் ஜான் சாமுவேல் உள்ளிட்ட மாவட்ட, மண்டல மற்றும் பல்வேறு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும் மாவட்ட பொதுச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், துணைத் தலைவர்கள், இளைஞர் காங்கிரஸ்,மாணவர் காங்கிரஸ், மகிளா காங்கிரஸ், மீனவர் பிரிவு, எஸ்.சி. பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் திரளாக பங்கேற்று மத்திய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தால் பழைய பேருந்து நிலையம் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



ஈரோடு மாவட்டம், வடுகபட்டி பேரூராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாம் குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (01.09.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

### சுதந்திர போராட்ட வீரர் மன்னன் பூலித்தேவனின் 311வது பிறந்தநாள்:

## தூத்துக்குடியில் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் மலர் தூவி மரியாதை



இந்திய விடுதலை வரலாற்றில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முதன்முதலில் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் மன்னன் பூலித்தேவனின் 311-வது பிறந்த நாளை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

தூத்துக்குடி கலைஞர் அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மன்னன் பூலித்தேவனின் திருவுருவப் படத்திற்கு, வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் மலர் தூவி, மாலை அணிவித்து புகழ்வணக்கம் செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன்,மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், அவைத்தலைவர் அன்பழகன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி மற்றும் வட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மன்னன் பூலித்தேவனுக்கு புகழ் வணக்கம் செலுத்தினர்.

## பள்ளிகளில் பருவநிலை மாற்றக்கல்வி: ராணிப்பேட்டையில் 3 நாள் ஆசிரியர் பயிற்சி தொடக்கம்



ராணிப்பேட்டை: பள்ளிப் பாடத்திட்டத்தில் பருவநிலை மாற்றக் கல்வியை ஒருங்கிணைக்கும் வகையில், தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கம் (TNCCM) மற்றும் SCERT இணைந்து நடத்தும் மூன்று நாள் ஆசிரியர் பயிற்சிப் பட்டறை ராணிப்பேட்டையில் தொடங்கியது.

மாவட்ட ஆட்சியர் என். பிரியா ரவிச்சந்திரன், I.A.S. பயிற்சியை தொடங்கி வைத்தார். இதில் முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மோகனா, மாவட்ட வன அலுவலர் கே.சிவகுமார்,மாவட்டச் சூழலியல் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பி. தேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து 80-க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் பங்கேற்கும் இப்பயிற்சியில், வெப்பம், நீர், கழிவு, பல்லுயிர் பெருக்கம் மற்றும் நிலையான வாழ்க்கை முறைஉள்ளிட்டதலைப்புகளில் 21 பயிற்சிப் பாடத்தொகுதிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்களிடையே பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தும் வகையில் இப்பாடத்தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2024-ல் தொடங்கிய இப்பணியில் SCERT அதிகாரிகள், பாடத்திட்ட வல்லுநர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் இணைந்து செயல்பட்டுள்ளன. பள்ளி நிலையிலேயே பருவநிலை மாற்றம் குறித்த அறிவையும் செயல்பாட்டையும் வளர்க்கும் தமிழ்நாட்டின் முக்கிய முன்னெடுப்பாக இப்பயிற்சிப் பட்டறை அமைந்துள்ளது.

## முன்விரோதத்தில் வீட்டின் மீது பெட்ரோல் நிரப்பிய பாட்டில் வீச்சு: வாலிபர் கைது

திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பொட்டல் காலனி பகுதியில், முன்விரோதம் காரணமாக வீட்டின் மீது பெட்ரோல் நிரப்பிய பாட்டில் வீசி கொலை மிரட்டல் விடுத்த வாலிபரை முக்கூடல் போலீசார் கைது செய்தனர். திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் அருகே பொட்டல் காலனியைச் சேர்ந்த பால்துரை (வயது 25) என்பவருக்கும்,அரியநாயகிபுரத்தைச் சேர்ந்த மணி(25) என்பவருக்கும் இடையே நேற்று முந்தினம் இரவு மதுபோதையில் ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக முன்விரோதம் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, மணி என்பவர் பதிவு எண் இல்லாத பைக்கில் வந்து, பால்துரையின் வீட்டின் மீது பெட்ரோல் நிரப்பிய பாட்டிலை வீசியதுடன், பால்துரையை கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். முக்கூடல் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.



அதைத் தொடர்ந்து, முக்கூடல் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் சப் - இன்ஸ்பெக்டர் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு, தலைமறைவாக இருந்த அரியநாயகிபுரத்தைச் சேர்ந்த வேம்பு மகன் மணியை கைது செய்தனர். பின்னர் மேற்சொன்ன வாலிபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த, சட்டப்படி நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக சீரமைப்புக் குழுவில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தலைமைக் கழகப் பிரதிநிதியாக தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த முக்கியப் பொறுப்பை வழங்கிய திமுக தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினுக்கு மேயர் ஜெகன் பெரியசாமி தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டத்தில் கழக அமைப்பை மேலும் வலுப்படுத்தி, சீரமைப்புப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதாக மேயர் ஜெகன் பெரியசாமி உறுதியளித்துள்ளார்.

## தூத்துக்குடியில் மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டி: கரூர் சேரன் கல்லூரி அணி வெற்றிபெற்றது



தூத்துக்குடி தாமோதரன் நகர் ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோவில் கொடை விழாவை முன்னிட்டு, மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் மற்றும் சண்முகபுரம் கபடி கிளப் சார்பில், மாநில அளவிலான கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான 'முருகேசன் நாடார் 2-ஆம் ஆண்டு நினைவு கோப்பை' மின்னொளி கபடி போட்டி கோவில் திடலில் விமரிசையாக நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில் சென்னை, ஈரோடு, கோவை, கரூர், திருச்சி, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 14 முன்னணி கல்லூரி அணிகள் லீக் முறையில் களம் கண்டன. பரபரப்பான இறுதி ஆட்டங்கள்

மாணவர் பிரிவு: விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரூர் சேரன் கல்லூரி அணியும், சென்னை லயோலா கல்லூரி அணியும் மோதின. கடைசி வினாடி வரை நீடித்த கடும் போராட்டத்தின் முடிவில் கரூர் சேரன் கல்லூரி அணி 26-25 என்ற புள்ளிக்கணக்கில் த்ரில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

மாணவியர் பிரிவு: பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் தென்காசி வியாசா கல்லூரி அணியை எதிர்த்து ஈரோடு பி.கே.ஆர். கல்லூரி அணி மோதியது. இதில் அபாரமாக ஆடிய ஈரோடு பி.கே.ஆர். கல்லூரி அணி 38-30 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது.

பரிசளிப்பு விழா

போட்டியைத் தொடர்ந்து நடைபெற்ற நிறைவு விழாவில், இந்திய கபடி அணியின் முன்னாள் கேப்டன் ராஜரத்தினம்,தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் உதவி துணைத் தலைவர் கவாஸ்கர், மண்டல மேலாளர் பரணிதரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரத்தின ராஜ், விஜயராகவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்குக் கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் கபடி கந்தன், ஸ்டீபன், பிரின்ஸ், கோவில் கமிட்டி தலைவர்கள் வெள்ளத்துரை, வெற்றிவேல், செயலாளர் அந்தோணி ராஜ், பொருளாளர் சடகோபன் மற்றும் முக்கிய பிரமுகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர். மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டிகளைத் திரளான பொதுமக்கள் கண்டு ரசித்து வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

## ஸ்பீடு ஸ்கேட்டிங்கில் தொடர்ந்து 4 தங்கப் பதக்கங்கள் அரக்கோணம் எல்கேஜி மாணவி அசத்தல்

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் எஸ்.ஆர். கேட் பகுதியைச் சேர்ந்த கௌரிசங்கர் - புவனேஸ்வரி தம்பதியரின் மகள் மகிழினி. கௌரிசங்கர்தனியார்நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு மகிழினி என்ற பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர்.

மகிழினி அரக்கோணத்தில் உள்ள தனியார் பள்ளியில் எல்கேஜி படித்து வருகிறார்.சிறுவயது முதலே விளையாட்டில்ஆர்வம் கொண்ட இவர், தனது 3 வயது முதல் ஸ்பீடு ஸ்கேட்டிங் பயிற்சி பெற்று வருகிறார்.

தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டுவரும் மகிழினி, ஸ்பீடு ஸ்கேட்டிங் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக, சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியில் நடைபெற்ற இன்டர் ஸ்கூல் ஸ்பீடு ஸ்கேட்டிங் போட்டியில்இரண்டு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

அதேபோல், சமீபத்தில் தனியார் சி.பி.எஸ்.இ பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஸ்பீடு ஸ்கேட்டிங் போட்டியிலும் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளார்.

இதன்மூலம் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தொடர்ந்து நான்கு தங்கப் பதக்கங்களை வென்று, எல்கேஜி வயதிலேயே ஸ்பீடு ஸ்கேட்டிங்கில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறு வயதிலேயே ஸ்கேட்டிங்கில் சாதனை படைத்து வரும் மாணவி மகிழினிக்கு பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



மேலும், எதிர்காலத்தில் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று சாதனைகள் படைக்கவேண்டும் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே மகிழினி ஒரு வயதில் இருக்கும்போது அறிவுக்கூர்மை பாராட்டி வேர்ல்ட் கின்னஸ் ரெக்கார்டு சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது..



ஈரோடுமாவட்டம்,அவல்பூந்துறைபேரூராட்சி,பாரதியார்நகர்பகுதியில்கலைஞர்நகர்ப்புறமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூட கட்டிடத்தின் கட்டுமானப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (01.09.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை தெப்பக்குளம் பகுதியில் விரிஸ்டா என்டர்டெயின்மென்ட்ன் சிங்கப் பெண்களின் சிங்கப் பாதை என்ற தலைப்பில் பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாக்கத்தான் மதுரை தெற்கு சட்ட மன்ற உறுப்பினர் கோபிசன் அவர்களின் தலைமையில் விரிஸ்டா என்டேர்டைன்மென்ட் நிர்வாக இயக்குனர் ரஞ்சிதா அவர்களின் ஏற்பாட்டிலும் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோபிசன் தமிழக முதல்வர் பெண்கள் பாதுகாப்பு பணிக்காக பல்வேறு சேவைகள் துவக்கி இருப்பதும், அதை பெண்கள் பயன்படுத்தும் முறையை குறித்து சிறப்புறையாற்றினார். இந்நிகழ்ச்சியல் சிங்கப்பெண்கள் அதிரடி படையை சேர்ந்த மூன்று பெண் காவல் அதிகாரிகள் தனபாக்கியலட்சுமி, தமிழரசி, தேன்மொழி உள்ளிட்டோர் பெண்கள் பாதுகாப்பு குறித்தும், சிங்கபெண்கள் அதிரடிபடையை எவ்வாறு அனுகுவது குறித்தும், தமிழ்நாடு அரசு வழங்கும் சேவைகள் குறித்தும் விரிவாக விளக்மளித்தனர். மேலும் இதில் விரிஸ்டா நிர்வாகிகள் சத்யபிரியா, கவிதா, சவிதா, பிரதீபா, வைஷ்ணவி, பிருத்தா,த.வெ.க பகுதி செயலாளர் நாகராஜன்தமிழ், த. வெ.க நிர்வாகிகள், தவெக மகளிரணியினர் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

# ரேஷன் கடையில் கிலோ ரூ.35க்கு வெங்காயம் விற்பனை; அமைச்சர் வெங்கடரமணன் தகவல்





வருகிற3-ந்தேதி முதல் 1 கிலோ வெங்காயம் ரூ. 35க்கு வழங்கப்படும் என அமைச்சர் வெங்கடரமணன் கூறியுள்ளார்.

உணவுப்பொருள் பாதுகாப்புத்துறை அமைச்சர் வெங்கடரமணன் சட்டசபையில் பேசியதாவது:-

ஈரான் போர் காரணமாக வாகன எரிவாயு விலை ஏற்றத்தால் போக்குவரத்து செலவு உயர்வு, அத்தியாவசிய வசிய பொருட்களான காய்கறிகள் போன்றவற்றின் விலை உயர்ந்துள்ளது. குறிப்பாக, அதிகளவில் வெங்காய உற்பத்தி செய்யக்கூடிய மத்திய பிரதேசம் மற்றும் மராட்டிய மாநிலத்தில் இருந்து வெங்காய வரத்து குறைந்ததன் காரணமாக வெளிச்சந்தையில் வெங்காயம் கிலோ 56 முதல் 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஏழை எளிய நடுத்தர மக்களின் நலனை கருத்தில்கொண்டு, வெங்காய விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையம், தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு மூலமாக முதற்கட்டமாக 1000 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு நியாயமாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நகர்ப்பகுதியில் ஒரு கிலோ வெங்காயம் 35 ரூபாய்க்கு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதான விற்பனை பண்டகசாலைகள் வழியாக அமுதம் அங்காடிகள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள நியாயவிலை கடைகள் மூலமாக விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. நியாயவிலை கடைகளில்,

வருகிற3-ந்தேதி முதல் 1 கிலோ வெங்காயம் ரூ. 35க்கு வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# Supreme Court quashes all FIRs across the country against NEET paper leak protesters

The Supreme Court on Tuesday quashed first information reports (FIR) registered across the country in connection with ticipated in these protests" and that mere participation in a protest would not be treated as an offence under penal laws. all FIRs criminal cases.

The Centre told the court that the government was committed to honouring three assurances given protest site. The police had sought permission to register one FIR against them to ascertain their individual roles, if any, in



the Cockroach Janata Party (CJP)-led protests in July, invoking its extraordinary powers under Article 142 of the Constitution, even as the group withdrew its call for a September 5 march in Delhi following assurances from the Centre that it would honour its commitments to withdraw criminal cases and compensation to families of students who died by suicide. A bench, comprising Chief Justice of India Surya Kant and justices Joymalya Bagchi and V Mohana said the decision would ensure that the criminal cases did not cause "any harm to students or youths who par-

relating to the protests between July 20 and 25 in the states and Union territories, including those not formally brought before it, would not be pursued or investigated and would be treated as closed for all purposes. It also directed that similar FIRs pending in other states and Union territories be treated in the same manner. "No further FIR shall be registered in relation to the same incident," the court directed.

The order followed applications filed by the Centre through Delhi Police and by Maharashtra, Assam, Bihar and West Bengal governments seeking quashing of the

after a July 25 meeting with representatives of the protesting group -- withdrawal of FIRs registered between July 20 and 25, no fresh FIRs relating to those incidents and compensation to families of NEET aspirants and students who died by suicide.

Solicitor general Tushar Mehta said the government was committed to all three assurances, but sought liberty to proceed against persons with "serious and grave criminal antecedents".

The court agreed to carve out an exception for 2,837 persons whom Delhi Police said had such antecedents and were prima facie present at the

incidents involving bodily harm or destruction of public property. The bench said the issue concerning the 2,837 persons could be considered separately, making clear that the exception did not dilute the larger relief granted to the protesters.

"There was a case of sieving out a section of protesters who had assembled with certain bona fide democratic demands and certain alleged elements with serious criminal antecedents," remarked the court, noting the Centre's contention that there had been an "infiltration" of elements who may have had ulterior motives.

# தேங்கிக் கிடக்கும் கழிவுபஞ்சுகள்: மாநகராட்சி ஆணையரிடம் விசைத்தறியாளர்கள் புகார்

## ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை – கழிவுபஞ்சுகளை அகற்ற மாநகராட்சி நிர்வாகம் உறுதி





ஈரோடு: ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வீரப்பன்சத்திரம், அசோகபுரம், மாணிக்கம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விசைத்தறிக்கூடங்களில் இருந்து வெளியேறும் கழிவுபஞ்சுகள் முறையாக அகற்றப்படாமல் குப்பைகளாக தேங்கிக் கிடப்பதாக விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் தொழில் வணிகர் சங்க நிர்வாகிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அனைத்து தொழில் வணிகர் சங்க கூட்டமைப்புத் தலைவர் ராஜமாணிக்கம், செயலாளர் ரவிச்சந்திரன், ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எல்.கே.எம். சுரேஷ், செயலாளர் ராசு என்கிற பழனிசாமி, இணைசெய்தித்தொடர்பாளர் தர்மலிங்கம், வீரப்பன்சத்திரம் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் அசோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் இன்று மாநகராட்சி ஆணையரை நேரில் சந்தித்து புகார் மனு அளித்தனர்.

சுகாதார பாதிப்பு ஏற்படும் அபாயம்

விசைத்தறிக்கூடங்களில் இருந்து வெளியேறும் கழிவுபஞ்சுகள் பல்வேறு பகுதிகளில் குவிந்து கிடப்பதால், சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். எனவே, தேங்கிக் கிடக்கும் கழிவுபஞ்சுகளை உடனடியாக அகற்றுவதுடன், தொடர்ந்து முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மாநகராட்சி ஆணையர் உறுதி

புகாரை கேட்டறிந்த மாநகராட்சி ஆணையர், குப்பைகளை எரித்து அழிக்கக்கூடிய இயந்திரத்தை மாநகராட்சி சார்பில் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும், இந்தப் பணிகள் அதிகபட்சம் ஒரு வாரத்திற்குள் நிறைவடைந்தவுடன், விசைத்தறிக்கூடங்களில் இருந்து வெளியேறும் கழிவுபஞ்சுகளை மாநகராட்சி நிர்வாகம் முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இதனால், நீண்ட நாட்களாக தேங்கிக் கிடக்கும் விசைத்தறி கழிவுபஞ்சுகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

# கோவை விவசாயம் மற்றும் தொழில் முன்னேற்றம், உலக நலன் வேண்டி லட்சம் கௌரி பூஜை திரளான பெண்கள் பங்கேற்றனர்



கோவை வைசியாள் வீதியில் அமைந்துள்ள வாசவி கன்னிகா பரமேஸ்வரி திருக்கோவிலில், லட்சம் கௌரி பூஜை வெகு விமர்சையாக நடைபெற்றது. கோயில் நிர்வாகத்தின் தலைவர் சுரேஷ் பாபு முன்னிலிலே, ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பிரக்ஞானந்த சரஸ்வதி பாலசுவாமிகள் தலைமையில் நடந்த இந்த சிறப்பு பூசையில் 300க்கும் மேற்பட்ட பெண்கள் திரளாக பங்கேற்று கௌரி அம்மனுக்கு பூசைகள் செய்து வழிபட்டிருக்கின்றனர்.

சங்கல்பம், கௌரி அஸ்டோத்திரம், லக்ஷ்மி அஸ்டோத்திரம், லலிதா சகஸ்ர நாமாவளி என 1,00,008 கௌரி அம்மனுக்கு பூசைகள் செய்து பக்தி பரவசத்துடன் வழிபட்டனர். மந்திரங்கள் சொல்லச் சொல்ல பெண்களும் பின் தொடர்ந்து மந்திரங்கள் சொல்லி கௌரி அம்மனுக்கு சிறப்பு பூஜைகளை செய்து பக்தி பரவசத்துடன் வழிபட்டனர். உலக மக்கள் நலன், உலக நாடுகளுடன் அமைதி, விவசாயம் மற்றும் தொழில் செழிக்க, வருடத்தின் 365 நாட்களும் அனைவரும் நலமுடன் இருக்க வேண்டும் என ஒவ்வொரு பெண்களும் 366 கௌரி அம்மன் சிலைகள் செய்து வழிபட்டனர். ஒரு கௌரி அம்மனுக்கு பூஜைகள் செய்யும் பொழுது கிடைக்கும் பலனை காட்டிலும், 366 கௌரி அம்மனுக்கு ஒரே நேரத்தில் பூஜை ஒவ்வொரு பெண்களும் சேர்ந்து மொத்தமாக ஒரு லட்சத்து எட்டு கௌரி அம்மன் பூஜை செய்தல் ஆன்மீக ரீதியில் பெரும் நன்மை பயக்கும் என போதையில் பங்கேற்ற பெரியவர்கள், பெண்கள் தெரிவித்திருக்கின்றனர். பூஜைகளைதொடர்ந்து அனைவருக்கும் கௌரி அம்மன் பிரசாதம், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. வாசவி கன்னிகா பரமேஸ்வரி கோயிலில் வருடம் தோறும் ஒவ்வொரு சிறப்பு நாட்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருவதாகவும், ஒரு லட்சத்து எட்டு கௌரி அம்மன் பூஜை சிறப்பு வாய்ந்தபூஜைஎன்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.